# விளக்கு



» ஒளி என்னும் வெளிச்சத்தை கொண்டு அறியாமை என்னும் இருளை போக்க தொண்டை காலம் முதலே நம் முன்னோர்களால் இந்நாள் வரையில், பூஜைகளில் விளக்கு என்னும் உபகரணத்தின் மூலமாக நாம் நம் தீய எண்ணங்களை அழித்து நல்ல எண்ணங்களுடன் வாழ்கிறோம்.

» விளக்குகள் நாட்டில் பல இருப்பினும் இறைவனை நாம் ஏற்றும் தீப ஒளியின் மூலம் காண்பது தனிச் சிறப்பே. வீடுகளிலும், கோவில்களிலும் பல்வேறு விதமான விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. நம் எண்ணங்கள் தெளிவு பெற விளக்கினை மட்டும் சார்ந்து இல்லாமல் அது செய்யப்படும் உலோகம் அதில் பயன்படுத்தப்படும் எண்ணெய் மற்றும் திரிகளை சார்ந்து உள்ளன.

» இவ்வளவு சிறப்பு வாய்ந்த விளக்கினை பற்றி நாம் சற்று விரிவாக நம் முன்னோர்கள் அருளிய பல மூல நூல்களில் இருந்து ஒரு சின்னத் தொகுப்பை பற்றி நாம் காண்போம்.

## வீடு மற்றும் கோவில்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு விதமான விளக்குகள்:

» தென் நாட்டில் இன்றைக்கு நமக்கு கிடைக்கும் அளவிற்கு உலோகங்களும், விளக்குகள் செய்வதற்கான உபகரணங்களும் அன்றைய காலங்களில் இல்லாததால் மக்கள் அனைவரும் பரம்பொருளான இறைவனை அகல் விளக்கு என்னும் மண் விளக்கின் உதவியுடன் இறைவனை கண்டு மகிழ்ந்தனர். அகல் விளக்குகள் அளவில் சிறியதாகவும், எங்கும் எடுத்துச் செல்ல எளியதாகவும் இருக்கும்.

» பின் கால வளர்ச்சியின் காரணமாக அந்த அகல் விளக்கில் பல்வேறு வண்ணங்கள் மற்றும் வெவ்வேறு வடிவங்களில் பல முகங்கள் கொண்டு செய்யப்பட்டு வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டன.

» உலோகங்களின் வருகையால் அகல் விளக்குகளின் பயன்பாடுகள் குறைந்து உலோகத்தால் ஆன விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. உலோகத்தால் ஆன விளக்குகள் உயரமாகவும், எண்ணெய் கொள்ளளவு அதிகம் கொண்டதாகவும் செய்யப்பட்டன.

» விளக்குகள் செய்ய பித்தளை, வெண்கலம் மற்றும் ஐம்பொன் போன்ற உலோகங்கள் பின்னாளில் பயன்படுத்தப்பட்டு செய்யப்படுகின்றன. குத்துவிளக்குகள் மற்றும் கிளை விளக்குகள் பல்வேறு வடிவங்கள் மற்றும் உயரங்களில் செய்யப்படுகின்றன. அவை குத்துவிளக்கு, கிளை விளக்கு, பஞ்சலோக விளக்கு மற்றும் காமாட்சி விளக்கு என ஏராளமான விளக்குகள் உள்ளன.

» மானிடர்களுக்கு ஐம்புலன்கள் இருப்பதை போல குத்து விளக்குகளிலும் ஐம்புலன்களை நம் முன்னோர்கள் காண்பிக்கின்றனர். நம் ஒவ்வொரு புலன்களிலும் இறைவன் வாசம் செய்வதை போன்று குத்துவிளக்குகளிலும் மும்மூர்த்திகளும், தேவிகளும் வாசம் செய்வதாக நம் சான்றோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

» குத்துவிளக்கின் அடிப்பகுதி - படைப்புக் கடவுளான பிரம்மா

» குத்துவிளக்கின் (தண்டுப் பகுதி) நடுப்பகுதி - காக்கும் கடவுளான விஷ்ணு

» குத்துவிளக்கின் உச்சிப் பகுதி - மோட்சத்தை அருளும் பரம்பொருளான சிவன்

» குத்துவிளக்கில் உண்டாகும் ஒளிச்சுடர் - பொருட் கடவுளான மகாலட்சுமி

» குத்துவிளக்கில் உண்டாகும் வெளிச்சம் - அறிவுக் கடவுளான சரஸ்வதி

» குத்துவிளக்கில் உண்டாகும் வெப்பம் - அன்னையான பார்வதி தேவி வாசம் செய்கின்றாள்

» ஐந்து முகங்கள் கொண்ட குத்து விளக்கே இறை வழிபாட்டிற்கு சிறந்தது.

## கிளை விளக்கு:

குத்து விளக்கில் பல கிளைகள் செய்யப்பட்டு சங்கிலியால் இணைக்கப்பட்டு இருக்கும். மேல் உள்ள விளக்கின் உச்சியில் மயில், அன்னம் மற்றும் இறைவனின் வடிவங்கள் செய்யப்பட்டு அலங்கரிக்கப்படும்.

## குத்துவிளக்கில் தீபம் ஏற்றுவதால் உண்டாகும் பலன்கள்:

» ஒரு முகம் - மத்திமம்

» இருமுகம் - கணவன், மனைவி ஒற்றுமை ஓங்கும்

» மூன்று முகம் - குடும்ப விருத்தி உண்டாகும்

» நான்கு முகம் - மனை மற்றும் கால்நடை லாபம் உண்டாகும்

» ஐந்து முகம் - சகல சௌபாக்கியம் உண்டாகும்

## காமாட்சி விளக்கு:



காமாட்சி விளக்கு, எல்லோரின் வீட்டில் இருக்கக்கூடிய விளக்கு ஆகும். புதுமண பெண்ணுக்கு தாயார் வீட்டு சீதனமாக இரண்டு குத்து விளக்கும், ஒரு காமாட்சி விளக்கும் கொடுப்பது தமிழர் தங்கள் வழக்கமாக கொண்டுள்ளனர். சுப பொருட்களில் ஒன்றாக காமாட்சி விளக்கு கருதப்படுகிறது.

## பாவை விளக்கு:



பாவை என்பது பெண்ணை குறிக்கிறது. அதாவது இறைவனின் திருவுருவங்களுக்கு முன்னால் இரண்டு பெண்கள் விளக்கை ஏந்தி ஒளி கொடுப்பதற்காக அமைக்கப்பட்டு இருக்கும்.

## மாவிளக்கு:



- கடவுள் சன்னிதியில் ஏற்றப்படும் பலவிதமான தீபங்களில் மாவிளக்கு தீபமும் ஒன்று. இதை பிரார்த்தனையாக செய்வது வழக்கத்தில் இருக்கிறது. ஆடி வெள்ளியன்று அம்மனுக்கு மாவிளக்கேற்றினால் அம்மன் மனம் குளிர்ந்து அருள்புரிவாள் என்பது ஐதீகம்.
- புரட்டாசி மாதத்தில் திருவோணம் நட்சத்திரத்தில் பெருமாளுக்கு போடப்படும் விளக்கு. மேலும் புரட்டாசி மாதத்தில் வரும் எல்லா சனிக்கிழமையும் மாவிளக்கு போடுவது சிறப்பாகும்.
- வருடத்துக்கு ஒருமுறை குலதெய்வ சன்னிதியில் அல்லது தனது வீட்டில் பச்சரிசி மாவை இடித்துத் தயார் செய்து, குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக சேர்ந்து அம்பாள் சன்னிதியில் மாவிளக்கு தீபம் ஏற்றுவது குடும்பத்தில் மென்மேலும் நன்மைகள் அதிகரிக்க காரணமாக அமையும்.

## தீபம் ஏற்ற உகந்த நேரம்:

- தீபம் ஏற்ற தகுந்த நேரம் என்பது பிரம்ம முகூர்த்தம் எனப்படும்,
- காலை நான்கு மணி முதல் ஆறு மணிக்குள் மற்றும்
- சூரியன் மறைவுக்கு பின் அதாவது மாலை ஆறு மணி முதல் ஏழு மணிக்குள்

## விளக்குகளை சுத்தம் செய்ய உகந்த நாட்கள்:

- விளக்குகளை திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் நன்றாக தேய்த்து கழுவி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
- எவர்சில்வர் விளக்குகளை தவிர்ப்பது நல்லது.

## தீபங்கள் ஏற்றும் இடங்கள்:

- வீட்டின் பூஜையறை
- நடு முற்றம்
- சமையலறை
- துளசி மாடம்
- பாம்பு புற்று
- நீர் நிலைகளின் கரைகள்
- ஆலயம் போன்ற இடத்திலும் தீபங்களை ஏற்றலாம்.

## தீபங்கள் 16 வகைப்படும்:

- தூபம்
- தீபம்
- அலங்கார தீபம்
- நாகதீபம்
- விருஷ தீபம்
- புருஷா மிருக தீபம்
- சூலதீபம்
- கமடதி (ஆமை) தீபம்
- கஜ (யானை) தீபம்
- வியக்ர (புலி) தீபம்
- சிம்ஹ தீபம்
- துவஜ (பொடி) தீபம்
- மயூர (மயில்)தீபம்
- பூரண கும்ப (5 தட்டு) தீபம்
- நட்சத்திர தீபம்
- மேரு தீபம்